**தேசிய சேமிப்பு வங்கி - 2020**

## 1.1 அபிப்பிராயம்

தேசிய சேமிப்பு வங்கியினதும் (''வங்கி'') வங்கி மற்றும் அதன் துணைக் கம்பனிகளினதும் (''தொகுதி'') 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையே நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

வங்கி மற்றும் தொகுதியின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க வங்கி மற்றும் தொகுதியின் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, தொகுதி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது தொகுதியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

வங்கியினதும் தொகுதியினதும் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் தொகுதியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தொகுதி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி வங்கியினதும் தொகுதியினதும் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு தொகுதிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொகுதியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- வங்கியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- வங்கியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் வங்கி இணங்கியிருந்ததா என்பதும்,

- வங்கி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வங்கியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளக கட்டுப்பாடு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதில் கைமுறையான பயன்பாடு உயர் ஆபத்து ஒன்றாக உள்ளது. கிளை பரீட்சை மீதி மற்றும் தலைமை அலுவலக பரீட்சை மீதி என இரண்டு பிரதான பரீட்சை மீதிகள் தனித்தனியாக தயாரிக்கப்படுகின்றன. அனைத்து கிளைகளின் பரீட்சை மீதிகளும் | தற்போது, கிளை பொதுப் பேரேடு மற்றும் தலைமை அலுவலக பொதுப் பேரேடு என்பன தனித்தனி பொ/பே முறைமைகளாகப் பேணப்படுகின்றன. எனினும், கொடுக்கல் வாங்கல்களுக்கு கைமுறையான பயன்பாடு காணப்படும் போது, தனியான பொ/பே முறைமைகளுக்கு | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது வங்கி கைமுறையான பயன்பாட்டைக் குறைக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| CBOS முறைமையிலிருந்து சுருக்கப்பட்டு அது MS excel spread sheet வடிவத்திற்கு மாற்றப்பட்டு தனியான கிளை பரீட்சை மீதி உருவாக்கப்படுகிறது. தலைமை அலுவலகப் பிரிவுகளின் பரீட்சை மீதிகள் தனித்தனியாக எடுக்கப்பட்டு அவை தனியான தலைமை அலுவலக பரீட்சைமீதிக்கு ஒன்றிணைக்கப்படுகின்றன. இறுதியாக, பரீட்சைமீதிகள் இரண்டையும் பயன்படுத்தி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றன. | கொடுக்கல் வாங்கல்களை எடுத்து பதிவு செய்வதை உறுதிப்படுத்துவதற்கு தேவையான கட்டுப்பாடுகள் உள்ளன. அனைத்து பரீட்சை மீதிகளும் பொ/பே முறைமைகள் மூலம் உருவாக்கப்படுகின்றதுடன் MS Excel Spread Sheets வங்கியின் நிதிக்கூற்றுக்களை (FS) தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படுகின்றதுடன் FS இன் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு தொடர்புடைய கட்டுப்பாடுகள் உள்ளன. மேலும், தற்போதைய முறைமையின் கைமுறையான பயன்படுத்தலை குறைப்பதற்கு முக்கிய வங்கியியல் தீர்வுகளை அமுல்ப்படுத்துதல் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருந்தது. | |

### 1.5.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது ஏடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கிளைகளுக்கு இடையேயான கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி பூச்சியமாக காணப்பட வேண்டிய போதிலும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அது ரூபா 218,733,468 மீதியை கொண்டிருந்தது, இதில் எமது தலைமை அலுவலக கணக்குகள், கிளை நடைமுறைக் கணக்குகள் மற்றும் ATM தீர்ப்பனவு கணக்குகள் என்பவற்றின் பொருண்மையான மீதிகள் உள்ளடங்குகின்றன. | நிதி அறிக்கையிடல் திகதியில் உள்ளவாறான போக்குவரத்தில் உள்ள கொடுக்கல் வாங்கல்கள் காரணமாக கிளைகளுக்கு இடையேயான கணக்குகளில் வரவு அல்லது செலவு மீதிகள் காணப்படலாம், மேலும் இது பின்னர் தீர்வை செய்யப்படும். | கணக்கிணக்கம் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### 1.6.1 பெறவேண்டியவை

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (1) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மோசடியான மீளப்பெறல்களிலிருந்து வங்கிக்கு பெறப்பட வேண்டிய தொகை ரூபா 134.4 மில்லியன் ஆகும். அதில், ரூபா 103,963,153 தொகை 5 | 2021/09/30 இல் உள்ளவாறு பெறப்பட வேண்டிய மோசடியான மீளப்பெறல்களின் தற்போதைய நிலை ரூபா 87.6 மில்லியனாக காணப்பட்டதுடன் சாத்தியமான நட்டங்களுக்கு போதுமானளவு | பதவியணியினரால் மேற்கொள்ளப்பட்ட மோசடிகள் தொடர்பான ஒழுக்காற்று நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட |

| | | |
|---|---|---|
| ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையாக காணப்பட்டது. மேலும் காப்புறுதி அல்லது ஏனைய அறவீட்டு முறையிலிருந்து அறவீடு செய்யப்பட்டிருக்காத ரூபா 77,292,906 தொகையான மீதியொன்று காணப்படுகின்றது. | நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.<br><br>மோசடியான மீளப்பெறல் கணக்குகளை நிர்வாகப் பிரிவு தொடர்ச்சியாக பின்தொடர்கின்றதுடன் மீதிகளை தீர்வு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.<br><br>மேலும், 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில், ஏனைய காப்புறுதி கோரிக்கைகளுக்கு மேலதிகமாக 5 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாகவுள்ள மோசடிகளுக்காக ரூபா 15 மில்லியன் கருணைத் தொகை கொடுப்பனவு (ex gratia payment) பெறப்பட்டிருந்தது.<br><br>2020 ஆம் ஆண்டில் ரூபா 42 மில்லியன் தொகையும் 2021 ஆம் ஆண்டில் ரூபா 2 மில்லியன் தொகையுமாக மொத்த காப்புறுதிக் கோரிக்கைகளை நாங்கள் பெற்றுள்ளோம்.<br><br>மேலும், வங்கியானது சுற்றறிக்கைகள், கடுமையான மேற்பார்வைகள் மற்றும் உள்ளக கணக்காய்வுகளை மேற்கொள்வதன் மூலம் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை வலுப்படுத்தியுள்ளது. | வேண்டியதுடன் மோசடிகளை குறைப்பதற்கு உள்ளக கட்டுப்பாட்டு முறைமை வலுப்படுத்தப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

---

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **1971 இன் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம்** | | | |
| (i) 47 ஆம் பிரிவு | 10 ஆண்டுகளுக்கு மேலாக செயற்படாத வைப்புக்கள் "உரிமை கோரப்படாத வைப்பு ஒதுக்கங்கள்" கணக்கிற்கு மாற்றப்பட வேண்டிய போதிலும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான | வங்கியானது செயற்பாடற்ற கடன் கணக்குகளில் உள்ள ரூபா 1,521 மில்லியன் தொகையை 2020 ஆம் ஆண்டில் "உரிமை கோரப்படாத வைப்பு ஒதுக்கங்கள்" கணக்கிற்கு மாற்றியிருந்தது. | என்எஸ்பீ சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளுடன் வங்கி இணங்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நிதிக்கூற்றுக்களில் ரூபா 836.48 மில்லியன் தொகை குறித்த ஒதுக்கத்திற்கு மாற்றப்படாமல் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | தொடர்ச்சியான உயர் சதவீதம் காரணமாக வாடிக்கையாளர்களுக்கு அவ்வப்போது (வருடாந்தம்) கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. மிகுதியாகவுள்ள மீதி அடுத்த ஆண்டு மாற்றத்திற்கு கருத்தில் கொள்ளப்படும். | |
| (ii) | 47(4) ஆம் பிரிவு | உரிமை கோரப்படாத வைப்பு ஒதுக்கங்கள் கணக்கு மூலம் வாடிக்கையாளர்களுக்கு வங்கியால் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் பொது திறைசேரியின் திரட்டிய நிதியத்திலிருந்து மீள்நிரப்பு செய்யப்பட வேண்டிய போதிலும் வங்கியானது 2000-2020 காலப்பகுதியின் போது வாடிக்கையாளர்களுக்கு செலுத்தியிருந்த ரூபா 703.13 மில்லியன் தொகையை மீள்நிரப்பு செய்திருக்கவில்லை. | திறைசேரிக்கு ஏற்கனவே கோரிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அது பின்பற்றப்பட்டு வருகிறது. | என்எஸ்பீ சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளுடன் வங்கி இணங்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 10,107 மில்லியன் தேறியலாபமாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் தேறியலாபம் ரூபா 6,381 மில்லியன் ஆக காணப்பட்டதால் நிதி விளைவுகளில் ரூபா 3,727 மில்லியன் தொகையான அல்லது 58 சதவீத முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது தேறிய வட்டி வருமானம், தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம், நிதிச் சொத்துக்களை அங்கீகரிப்பதில் இருந்தான தேறிய மிகை என்பவற்றின் அதிகரிப்பு இம் முன்னேற்றத்திற்கான காரணங்களாகும்.

## 2.2 முக்கிய வருமான செலவின விடயங்கள் தொடர்பான போக்கு பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான முக்கிய வருமான செலவின விடயங்கள் தொடர்பான பகுப்பாய்வு அதிகரிப்பு அல்லது குறைவு சதவீதத்துடன் கீழே தரப்பட்டுள்ளது.

| விபரம் | வேறுபாட்டு தொகை அதிகரிப்பு/ (குறைவு) (ரூபா'000) | வேறுபாடு % | வேறுபாட்டிற்கான காரணம் |
|---|---|---|---|
| தேறிய வட்டி வருமானம் | 6,058,167 | 21 | கடன் மற்றும் ஏனைய கருவிகளிலிருந்தான வட்டி வருமானம் ரூபா 12,254 மில்லியனால் அதிகரித்திருந்தது, 2020 ஆம் ஆண்டில் வங்கி மற்றும் வேறொரு கடன் பெறுபவரிற்கு செலுத்த வேண்டிய வட்டிச் செலவினங்கள் முறையே ரூபா 4,023 மில்லியன் மற்றும் ரூபா 4,567 மில்லியனால் குறைவடைந்திருந்தன. |
| தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 1,426,687 | 126 | கடன் தொடர்பான சேவைகள் மூலம் கிடைக்கும் கட்டணங்கள் மற்றும் வருமானம் அதிகரித்தமை. |
| தேறிய ஏனைய செயற்பாட்டு வருமானம் | 385,188 | (91) | அந்நியச் செலாவணி மீள்மதிப்பீட்டு வருமானம் ரூபா 107 மில்லியனால் துரிதமாக வீழ்ச்சியடைந்திருந்ததுடன் பங்கிலாப வருமானம் ரூபா 202 மில்லியனால் அதிகரித்திருந்தது. |
| கடன் மற்றும் ஏனைய நட்டங்களுக்கான நட்டக்கழிவு கட்டணங்கள் | 4,297,780 | 782 | முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது கடன் மற்றும் முற்பணத்திற்கான நட்டக்கழிவு ஏற்பாடு 61 சதவீதம் அல்லது ரூபா 4,304 மில்லியனால் அதிகரித்திருந்தது. |
| வற், என்பீரீ, டிஆர்எல் உள்ளடங்கலான மொத்த செலவினங்கள் | (1619,847) | (8) | என்பீரீ மற்றும் டிஆர்எல் பொறுப்புக்களை நீக்கியதன் காரணமாக 2020 ஆம் ஆண்டில் அச் செலவினங்கள் ரூபா 2,151 மில்லியனால் குறைவடைந்திருந்தன. |

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான வங்கியின் முக்கிய சில விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விபரம் | துறை விகிதம் * | வங்கி 2020 | வங்கி 2019 |
|---|---|---|---|
| **இலாபத்தன்மை விகிதங்கள்** | | | |
| உரிமை மூலதனம் மீதான திரும்பல் (ஆர்ஓஈ) | 16.7 | 20.67 | 14.34 |
| சொத்துக்கள் மீதான திரும்பல் (ஆர்ஓஏ) | 1.3 | 1.24 | 0.95 |
| வட்டி எல்லை | 3.4 | 2.77 | 2.63 |

| | | | |
|---|---|---|---|
| சொத்துக்கள் தர விகிதம் | | | |
| மொத்த செயற்பாடற்ற முற்பணங்கள் (என்பிஎல்) | 6.8 | 2.79 | 1.57 |
| **மூலதன போதுமை விகிதங்கள்** | | | |
| Basel 111 – தட்டு 1 (ஆகக்குறைந்தது 8%) | 11.8 | 13.65 | 13.49 |
| Basel 111 – மொத்தம் (ஆகக்குறைந்தது 12%) | 14.8 | 16.45 | 15.82 |
| **திரவத்தன்மை சொத்துக்கள் விகிதம்** | 60.4 | 69.1 | 60.2 |

* இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட தகவல்களில் இருந்து துறை விகிதங்கள் பிரித்தெடுக்கப்பட்டன.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வங்கியின் உரிமை மூலதனம் மீதான திரும்பல் (ஆர்ஓஈ) விகிதம் மற்றும் சொத்து மீதான திரும்பல் (ஆர்ஓஏ) என்பன முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2020 ஆம் ஆண்டில் முறையே 6.33 சதவீதம் மற்றும் 0.29 சதவீதத்தால் அதிகரித்திருந்தன.

(ii) திரவச் சொத்துகள் விகிதம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2020 ஆம் ஆண்டில் 8.9 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. மேலும், இவ் விகிதம் 60.4 சதவீத கைத்தொழில்துறை சராசரியை விட அதிகமாக உள்ளது.

(iii) வங்கியின் மொத்த மூலதனப் போதுமை விகிதம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 16.45 சதவீதமாக அறிக்கையிடப்பட்டிருந்தது, இது 14.8 சதவீத ஆகக்குறைந்த நியதிச்சட்ட தேவைப்பாட்டை விட சற்று அதிகமாகும்.

(iv) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2020 ஆம் ஆண்டின் வங்கியின் தேறிய வட்டி எல்லை 0.13 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. எனினும், வட்டி எல்லையானது 3.4 சதவீத கைத்தொழில்துறை சராசரி வட்டி எல்லையை விட குறைவாக உள்ளது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2008 இல் 18 மாடிக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக பெறப்பட்ட தொழில்சார் சேவைகளுக்காக ரூபா 35.23 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும், குறித்த நிர்மாணப் பணிகள் கைவிடப்பட்டு, அதற்காக ஏற்பட்ட செலவினங்கள் பயனற்ற செலவினமாகியிருந்ததுடன் இம் மீதி 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் முற்பணத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. | 18 மாடி கட்டிடத்திற்கான செயற்திட்டம் மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகம் (CECB) உட்பட வெளியக தொழில்சார் நிறுவகத்துடன் தொடங்கப்பட்டிருந்ததுடன் இம் மூலதனச் செலவு அவர்களின் தொழில்சார் சேவைகளுக்காக அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. தலைமை அலுவலக வளாகத்தில் பெரிய அபிவிருத்தியொன்றை திட்டமிடுவதற்கு அருகிலுள்ள 106 பேர்ச் காணியை நீண்டகால குத்தகைக்கு பெறுவதற்கான | இக் கொடுக்கல் வாங்கல்கள் மூலம் வங்கிக்கு ஏற்படும் நட்டத்தை குறைப்பதற்கு வங்கி உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | சாத்தியக்கூறுகள் தொடர்பாக UDA உடன் கலந்துரையாடப்பட்டு வருகிறது.<br><br>CECB இன் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு அதற்கிணங்க புதிதாகத் தயாரிக்கப்படும் செயற்திட்டத்திற்கான சேவைக் கட்டணம் கலந்துரையாடப்பட்டு, செயற்திட்டத்திற்கு அவர்கள் தெரிவுசெய்யப்பட்டால், பொருத்தமான குறைப்புக்காக அவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தப்படும்.<br><br>மேலும் 2020.12.31 இல் உள்ளவாறு ஏதேனும் சாத்தியமான நட்டங்களிற்காக ரூபா 35.23 மில்லியன் நிதியேற்பாடு ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (1) 2021 ஜனவரியில் உள்ளக கணக்காய்வு பிரிவு 258 கிளைகளில் நடாத்திய விசாரணையின் பிரகாரம் ரூபா 195,365,919 நிலுவை பெறுமதிக்கான 390 கடன் கோவைகள் தவறவிடப்பட்டிருந்தன. | | |
| (அ) அத் தவறவிடப்பட்ட கோவைகளில், ரூபா 29,846,707 கடன் பெறுமதிக்கான 100 கோவைகள் செயற்பாடற்ற கடன் கோவைகளாக உள்ளன. குறித்த செயற்பாடற்ற வகையிலான 100 தவறவிடப்பட்ட கடன் கோவைகளில் ரூபா 1,506,770, ரூபா 19,032,365 மற்றும் ரூபா 9,307,572 பெறுமதியான முறையே 02 சட்ட கோவைகள், 38 வீட்டுக் கடன் கோவைகள் | கிளை முகாமையாளர்கள்/ பிராந்திய முகாமையாளர்கள் அவர்களது கிளைகளில் உள்ள கடன் கோவைகளை அரையாண்டுக்கு ஒருமுறை அல்லது அரையாண்டு ரீதியாக யூன் 30 மற்றும் திசெம்பர் 31 இல் பௌதீக மெய்மையாய்வை மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன. | கடன் கோவைகளை பேணுதல் தொடர்பான உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறைகள் வலுப்படுத்தப்பட வேண்டும். |

மற்றும் 60 தனிநபர் கடன் கோவைகள் உள்ளடங்குகின்றன.

(ஆ) அறிக்கையிடல் திகதி வரை கோவைகள் தவறவிடப்பட்டமை தொடர்பாக பொறுப்பான தரப்பினருக்கு எதிராக வங்கியால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

இதற்கு மேலதிகமாக இக் கடன் கோவைகளின் கட்டுக்காப்பு மற்றும் பாதுகாப்பின் முக்கியத்துவம் மற்றும் உரிய அறிவுறுத்தல்களை பின்பற்றுதல் தொடர்பாக கிளைகளுக்கு 469/2018 ஆம் இலக்க DGM (செயற்பாடுகள்) இன் அறிவுறுத்தல் கடிதம் மற்றும் 535/2019 ஆம் இலக்க சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளரின் அறிவுறுத்தல் கடிதம் ஆகியவற்றின் மூலம் மேலும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

-கடன் கோவைகளின் கட்டுக்காப்பு மற்றும் பாதுகாப்பு மற்றும் முக்கியத்துவம் ஆகியவற்றில் ஏதேனும் குறைபாடுகள் காணப்பட்டால் 2022 ஆம் ஆண்டிற்காக நடாத்தப்படும் பதவியணியினர் பயிற்சி அமர்வுகளில் நடைமுறையில் இருக்கும் பொறிமுறை மற்றும் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் குறித்து கிளை பதவியணியினரிற்கு கற்பிப்பதன் மூலம் நிலைமையை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

-தற்போதைய உள்ளக கட்டுப்பாட்டு முறைமையின் குறைபாடுகள் மற்றும் பலவீனங்கள் வங்கியின் உள்ளக கணக்காய்வு பிரிவின் மூலம் மற்றும் அவர்களின் பரிந்துரைகளின் அடிப்படையில் இனங்காணப்படும்;

முன்மொழியப்பட்ட முக்கிய வங்கியியல் முறைமையை அமுல்ப்படுத்துவதற்கு ஏற்ப முறையான பொறிமுறையொன்று வகுக்கப்பட வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | | கடந்த சில மாதங்களாக கொவிட் 19 தொற்றுநோய் பரவி வருவதால் பதவியணி உறுப்பினர்கள் கடமைக்கு அறிக்கையிடுவதில் அரசாங்க கட்டுப்பாடு இருந்ததால், காணாமல் போன கோவைகளை தேடும் செயற்பாடுகளில் அதிக தாமதம் ஏற்படலாம். எனினும் காணாமல் போன இந்த 6 கோவைகளை தேடும் செயற்பாட்டில் பதவியணி உறுப்பினர்கள் தற்போது அவர்களாகவே தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். | |
| (2) | 739/2009 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் 21 நாட்கள் சலுகை விடுமுறையில் (privilege leave), 7 நாட்கள் விடுமுறை கட்டாயம் நீடிக்கப்பட வேண்டும். அத்தகைய 7 நாட்கள் சலுகை விடுமுறையைப் பெறுகின்ற ஊழியர்கள் மேலும் 7 நாட்கள் சலுகை விடுமுறை காசினை பெற்றுக்கொள்வதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.<br><br>எவ்வாறாயினும், 2020 ஆகஸ்ட் 21 ஆம் திகதிய பொது முகாமையாளரின் 1949/2020 ஆம் இலக்க புதிதாக வழங்கப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் 2020 இன் 7 நாட்கள் கட்டாய விடுமுறையை தொடர்ந்துவரும் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் நீடிக்கவோ அல்லது தடுமாறியோ பயன்படுத்த அனுமதிக்கப்படுகிறதுடன் 7 நாட்கள் கட்டாய விடுமுறையை எடுத்திருக்காத ஊழியர் மீதமுள்ள சலுகை விடுமுறையின் அதிகபட்ச 7 நாட்களை காசாக்குவதற்கான உரிமை அனுமதிக்கப்படுகிறது.<br><br>பெரும்பாலான உத்தியோகத்தர்கள் பணிக்கு அறிக்கையிட்டிருக்காததால் இதுபோன்ற ஒரு சூழ்நிலையில் (கொவிட் 19 தொற்றுநோய் | 2020 ஆம் ஆண்டின் போது கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக நாடு ஏறத்தாழ 03 மாதங்களாக பூட்டப்பட்ட நிலையில் இருந்தது. மேலும் ஊழியர்கள் ஆண்டின் பிற்பகுதியில் வீட்டிலிருந்து பணிபுரியும் போது ரோஸ்டர் அடிப்படையில் (roster basis) கடமைக்கு அறிக்கையிட்டிருந்தனர். இதற்கு மேலதிகமாக கர்ப்பிணி பணியாளர்களும் கடுமையான நோய்களால் பாதிக்கப்பட்ட பணியாளர்களும் கொவிட் 19 அபாயத்தின் காரணமாக வீட்டிலிருந்து வேலை செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தனர். இதன் விளைவாக, ஊழியர்கள் வழக்கமான அடிப்படையில் கடமைக்கு அறிக்கையிட முடியாதிருந்ததுடன் அவர்களின் விடுமுறை உரிமைகள் பயன்படுத்தப்படாமல் உள்ளன.<br><br>மேலும், வங்கியானது 2020 ஆம் ஆண்டிலேயே ஊழியர்களை 7 நாட்கள் கட்டாய விடுமுறையில் அனுப்பியிருந்தால், பயணக் | அந்த 7 நாட்கள் விடுமுறை தொடர்ச்சியாக எடுக்கப்படாமல் கட்டாய விடுமுறையின் நோக்கம் அடைந்து கொள்ளப்படமாட்டாது. மேலும் அந்த விடுமுறையை அடுத்த ஆண்டுக்கு முன்கொண்டு செல்வது வங்கியின் நாளாந்த செயற்பாட்டைப் பாதிக்கும். எனவே, இதுபோன்ற தீர்மானத்தை எடுப்பதற்கு முன்னர் வங்கிக்கு பதவியணியினரின் பங்களிப்பை பெற்றுக்கொள்வதில் முகாமைத்துவம் அதனது கவனத்தை செலுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| காலப்பகுதி) இதுபோன்ற தீர்மானத்தை நியாயப்படுத்த முடியாது, | கட்டுப்பாடுகள் மற்றும் பணியாளர்கள் ரோஸ்டர் அடிப்படையில் பணிபுரிதல் காரணமாக பணி தொடர்பான தாமதம் ஏற்பட்டதால் இது வங்கியின் செயற்பாடுகளை மோசமாகப் பாதித்திருக்கும்.<br><br>நாடு முழுவதையும் பாதித்திருந்த கொவிட் 19 தொற்றுநோயால் தவிர்க்க முடியாத சூழ்நிலை காரணமாக ஊழியர்கள் கடமைக்கு அறிக்கையிட முடியாதிருந்ததால் ஊழியர்களின் ஏழு நாள் உரிமையை 2022.12.31 வரை முன்கொண்டு வருவதற்கு அனுமதியளிப்பதற்கு முகாமைத்துவம் தீர்மானித்திருந்தது. ஏனைய வங்கிகளால் பின்பற்றப்படும் நடைமுறைகளையும் கருத்தில் கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. | |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (1) | (அ) | மீளாய்வாண்டின் போது 259 கிளைகளில், 7 கிளைகள் நட்டமடைந்த கிளைகளாக இனங்காணப்பட்டன. அவற்றுள் கதிர்காமம், கட்டுவான மற்றும் வெலிவேரியா கிளைகள் 2020 ஆம் ஆண்டின் போது திறக்கப்பட்டிருந்தன. தெய்யந்தர, பொத்துவில் மற்றும் மாகொல ஆகிய கிளைகளும் 2020 ஆம் ஆணடில் நட்டமடைந்திருந்தன. எனினும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அந்த நட்டம் குறைவடைந்துள்ளது. அக்கரைப்பற்று கிளையின் | பொதுவாக, ஒரு கிளையைத் திறந்த பின்னர் இலாபத்தை ஈட்டுவதற்கு ஏறத்தாழ 3 ஆண்டுகள் எடுக்கின்றது.<br><br>அதற்கிணங்க, கதிர்காமம், கட்டுவான மற்றும் வெலிவேரியா கிளைகள் இந்த 3 ஆண்டு காலப்பகுதியை விஞ்சியிருக்கவில்லை. எனினும், கதிர்காமம் மற்றும் கட்டுவான கிளைகளின் நட்டங்கள் 2021.11.30 இல் உள்ளவாறு குறைவடைந்துள்ளதுடன் நட்டமடைந்த அனைத்து கிளைகளும் நெருக்கமாக கண்காணிக்கப்படும். 2020 | நட்டமடைந்த கிளைகள் நெருக்கமாக கண்காணிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நட்டம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 141,184 ஆல் அதிகரித்திருந்தது. | இல் நட்டமடைந்த கிளைகளில் இருந்த தெய்ந்தர, மாகொல மற்றும் அக்கரைப்பற்று ஆகியவை 2021.11.30 வரை இலாபங்களை ஈட்டியிருந்தன. | |
| | (ஆ) | மீளாய்வாண்டில் வங்கியின் கடன் பிரிவு ரூபா 48,706,065 இலாபத்தை ஈட்டியிருந்த போதிலும் ரூபா 677,808,076 முன்னைய ஆண்டு இலாபத்துடன் ஒப்பிடும் போது இது 92.8 சதவீத வீழ்ச்சியாகும். | வட்டி வருமானத்தில் ஏற்பட்ட குறைவு காரணமாக கடன் பிரிவின் இலாபம் குறைவடைந்துள்ளது. இதற்கு 2020 இல் நிலவிய குறைந்த சந்தை வட்டி விகிதங்கள் காரணமாகும். மேலும், கடன் பிரிவுக்கு (தலைமை அலுவலக வட்டி விகிதம்) அறவிடப்படும் வட்டிக் கிரயம் இரண்டு ஆண்டுகளுக்கும் மாறாமல் இருக்கும். | ஆக்கபூர்வமான அறவீட்டு செயன்முறை மற்றும் கடன் வழங்கும் செயன்முறையை மேற்கொள்வதன் மூலம் வங்கி இலாபத்தை ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவில் வைத்திருக்க வேண்டும். |
| (2) | | 1983 ஆம் ஆண்டு முதல் தபால்மா அதிபர் (PMG) சேவைக் கட்டணத்தை வங்கி செலுத்தியிருந்தது. தற்போது, சேவைக் கட்டணம் 2013 ஆம் ஆண்டின் அடிப்படைப் புள்ளிவிபரத்தின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படுகின்றதுடன் அது ஆண்டிற்கான கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் பிரகாரம் வருடாந்த பணவீக்கத்திற்காக சீராக்கம் செய்யப்படுகிறது. PMG இற்கு செலுத்தப்பட்ட சேவைக் கட்டணம் 2016 இல் 128 மில்லியனிலிருந்து 2020 இல் 160.4 மில்லியன் வரை அதிகரித்திருந்தது.<br><br>சேவைக் கட்டணங்களைக் கணிப்பீடு செய்வதற்காக நியாயமான அடிப்படையை (அஞ்சல் வைப்புக்கள், அஞ்சல் அல்லது பண மீளப்பெறல்கள் அல்லது வேறு ஏதேனும் நியாயமான அடிப்படையில்) பயன்படுத்தாமல் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை பயன்படுத்தி அல்லது 1983 இல் மேலே | அஞ்சல் பிரிவுக்கு அவர்களின் சேவைகளுக்காக NSB ஆல் வருடாந்த சேவைக் கட்டணம் செலுத்தப்படுகிறது. தபால்மா அதிபரின் இணக்கப்பாட்டுடன் சேவைக் கட்டணத்தை கொடுப்பனவு செய்வதற்குப் பயன்படுத்தப்படும் தற்போதுள்ள முறைமை திருத்தம் செய்யப்பட வேண்டும். | PMG இற்கான சேவைக் கட்டணங்களை கணிப்பீடு செய்யும் போது வங்கியால் நியாயமான அடிப்படை பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குறிப்பிட்ட கலந்துரையாடல் குறிப்பிற்கு இணங்க வங்கி இன்னும் சேவைக் கட்டணத்தைக் கணிப்பீடு செய்கின்றது. | | |
| (3) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தபால்மா அதிபரிடமிருந்து (PMG) இணக்கம் செய்யப்படாத பெறவேண்டிய மீதி ரூபா 22,459,556 ஆக காணப்பட்டது. | இணக்கம் செய்யப்படாத பெறவேண்டிய மீதிகளை தெளிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | குறித்த மீதி காலரீதியாக கணக்கிணக்கம் செய்யப்பட வேண்டும். |

### 3.4 சர்சைத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அநுராதபுரம், எல்பிட்டிய, கல்நேவ, கதிர்காமம், கிரிடிவெல, மொனராகலை, இரத்தினபுரி, கெக்கிராவ ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள எட்டுக் காணிகளின் சட்டரீதியான உரிமைத்துவத்தை பெற்றுக்கொள்ளாமல் அக் காணிகளின் நிர்மாண செயற்பாடுகளுக்காக ரூபா 83.6 மில்லியன் தொகையை வங்கி செலவிட்டிருந்தது. இக் கணக்காய்வு அவதானிப்பு 2014 ஆம் ஆண்டிலிருந்து அறிக்கையிடப்பட்டதுடன் கட்டிடங்கள் அந்த ஆண்டுக்கு முன்னதாகவே நிர்மாணிக்கப்பட்டன. அவற்றுக்கான சட்டரீதியான உரிமைத்துவத்தை பெற்றுக்கொள்வதற்கு காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்துடன் இவ் விடயத்தை கலந்துரையாடுவதற்கு COPE பணிப்புரை வழங்கப்பட்டிருந்தது. எனினும் 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அக் காணிகளின் சட்டரீதியான உரிமைத்துவத்தை வங்கி பெற்றிருக்கவில்லை. | அனுராதபுரம்<br>மாநகர ஆணையாளரால் அனுப்பப்பட்ட ஆவணங்களை வங்கி முறையாக பூர்த்தி செய்துள்ளது. 2021.10.22 இல் தற்போதைய நிலைமையைக் கோரி பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.<br><br>எல்பிட்டிய<br>NSB எல்பிட்டிய கிளையினால் தயாரிப்புக் கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளதுடன் 2021.07.16 இல் அளவை திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக குறிப்பிட்டு DS பதிலளித்திருந்தார்.<br><br>கல்னேவா<br>பிரதேச செயலகத்தினால் விடுக்கப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் நீண்டகால குத்தகைக்குள் நுழைவதற்கான இணக்கப்பாட்டு கடிதத்தை GM வழங்கியுள்ளார். நினைவூட்டல் 2020.03.03 இல் அனுப்பப்பட்டதுடன் மேலும் நினைவூட்டல்கள் 2021.05.17 & 2021.10.22 இல் அனுப்பப்பட்டு பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.<br><br>கதிர்காமம்<br>ஆணையாளர் நாயகம் - பௌத்த அலுவல்கள் திணைக்களம் கதிர்காம தேவாலய பஸ்நாயக்க நிலமேக்கு குறித்துரைக்கப்பட்ட குத்தகைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை அறிவித்துள்ளார். அத்துடன் குத்தகையை தயாரிப்பதற்கு மேலும் தெரிவிக்கப்பட்டதுடன் அதனை | 2014 இல் இருந்து குத்தகை உரிமையை எடுப்பதற்கு வங்கி முயற்சித்து வருகிறது. இந்த காணிகளுக்கான குத்தகை உடன்படிக்கைகளை பெற்றுக்கொள்வதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

பௌத்த அலுவல்கள் திணைக்களத்திற்கு அங்கீகாரத்திற்காக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

கெக்கிராவ
நீண்டகால குத்தகை உடன்படிக்கையொன்றை கைச்சாத்திடுவதற்கு உட்பட்டு காணியை பயன்படுத்ததுவதற்கு DS - கெக்கிரவா 2020.06.18 ஆம் திகதிய அவரது கடிதத்தின் மூலம் வங்கிக்கு அனுமதியை வழங்கியுள்ளார். தற்போதைய நிலைமை 2021.10.22 இல் கோரப்பட்டுள்ளது.

கிரிடிவெல
நீண்டகால குத்தகை தயாரிப்பது தொடர்பில் காணி ஆணையாளர் நாயக திணைக்களத்திற்கு தொம்பே பிரதேச செயலகம் அறிவித்துள்ளது. நினைவூட்டல்கள் 2019.10.15, 2021.05.17 & 2021.10.22 இல் அனுப்பப்பட்டுள்ளன.

மொனராகலை
2020 ஆம் ஆண்டுக்கான நில வாடகையை வங்கி பிரதேச செயலகத்திற்கு செலுத்தியுள்ளதுடன் நீண்டகால குத்தகையொன்றை கைச்சாத்திடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போதைய நிலைமை 2021.10.22 இல் கோரப்பட்டுள்ளது.

இரத்தினபுரி
அனைத்து ஆவணங்களும் இரத்தினபுரி பிரதேச செயலகத்திற்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் குத்தகை மாத்திரம் விடுவிக்கப்பட வேண்டும். 2021.05.17 இல் நினைவூட்டல் ஒன்று அனுப்பப்பட்டுள்ளதுடன் DS அதனை இறுதியாக்கும் செயன்முறையில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர் என குறிப்பிட்டு 2021.06.25 இல் பதிலளித்துள்ளார். தற்போதைய நிலைமை 2021.10.22 இல் கோரப்பட்டுள்ளது.

**3.5 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2008 ஆம் ஆண்டில் நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து 50 வருட காலத்திற்கு குத்தகைக்கு பெறப்பட்ட 38.8 பேர்ச் பரப்பளவான காணி கடந்த 11 வருடங்களாக பயனுள்ள நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த வளாகத்தில் வங்கிச் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்துவதற்காக புதிய கட்டிடத்தை உருவாக்குவதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்தது. எனினும், புதிய கட்டிட செயற்திட்டங்களை 2022 ஆம் ஆண்டு வரை மேற்கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்திருந்தது, எனவே, இந்த செயற்திட்டத்தை பிற்போடுவதற்கு கூட்டுத்தாபன முகாமைத்துவக் குழு தீர்மானித்திருந்தது. | வங்கி விசேட நோக்கமொன்றுடன் காணியில் முதலீடு செய்ய வேண்டும். |

**3.6 மனித வளங்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (1) 2020 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு 5408 சபை அங்கீகரித்த பதவியணியினரில் 748 வெற்றிடங்கள் காணப்படுகின்றன.<br>(அ) 2,502 நிறைவேற்றுத் தர பதவியணியினரில் 5 பிரதி பொது முகாமையாளர்கள், 6 உதவிப் பொது முகாமையாளர்கள், 28 பிரதம முகாமையாளர்கள், 10 சிரேஷ்ட முகாமையாளர்கள், 13 முகாமையாளர்கள் மற்றும் 140 உதவி முகாமையாளர்கள் உள்ளடங்கிய 660 அல்லது 26 சதவீதம் வெற்றிடமாக உள்ளது. இது வங்கியின் சீரான செயற்பாட்டில் பாதிப்பை ஏற்படுத்தலாம்.<br>(ஆ) தரம் III-III இன் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் (1043), ஆண்டின் இறுதியில் உள்ளவாறு 430 வெற்றிடங்கள் காணப்பட்டன.<br>(இ) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதவியணி உதவியாளர்களின் (தரம் VI) நிறைவேற்று தரமல்லாத பதவிகள் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் 38 சதவீதமாக இருந்தது. 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 229 ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்கள் உட்பட 2,000 உள்ளபடியான பதவியணியினர் காணப்பட்டதுடன் 66 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டன. | 2019 இல் சனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டு 2020 இல் பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டதால் மீதமுள்ள வெற்றிடங்களை நிரப்புவதில் தாமதம் ஏற்பட்டது. மேலும், கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக, ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுகளுக்கான நேர்முகப்பரீட்சைகள் பிற்போடப்பட்டன. எனினும், 2020 ஆம் ஆண்டின் போது DGMM (சிறப்பு தரம்) இற்கு 03 பதவி உயர்வுகள் வழங்கப்பட்டன. Gr. III-II இற்கு பதவி உயர்வுக்கான எழுத்துப் பரீட்சை 2020 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்டது. 2021 ஆம் ஆண்டின் போது தரம் III-III மற்றும் III-II இற்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டன. | வங்கியில் காணப்படும் வெற்றிடங்கள் நியாயமான காலத்தினுள் நிரப்பப்பட வேண்டும். |

(2) வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் ஆண்டுக்கு ஆண்டு மாற்றப்பட்டு வருகிறது. நிறைவேற்று மட்ட AGM மற்றும் DGM பதவிநிலைகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் எண்ணிக்கை கடந்த 5 ஆண்டுகளின் போது பின்வரும் முறையில் மாற்றப்பட்டிருந்தது.

| பதவி | 2020 | 2019 | 2018 | 2017 | 2016 |
|---|---|---|---|---|---|
| SDGM | 02 | 02 | 02 | 02 | 02 |
| DGM | 12 | 12 | 13 | 13 | 13 |
| AGM | 26 | 26 | 21 | 19 | 24 |

(அ) 2017 ஆம் ஆண்டில், DGM (நிர்வாகம்), இடர் முகாமைத்துவ தலைவர் மற்றும் DGM (சொத்து முகாமைத்துவம்) என்பன நிரந்தரப் பதவியணியிலிருந்து நீக்கப்பட்டு, DGM (சர்வதேசம்), DGM (கடன்) மற்றும் ஆலோசனையாளர் (திறைசேரி - ஒப்பந்த அடிப்படை) ஆகியோர் பதவியணிக்கு சேர்க்கப்பட்டுள்ளனர்.

வங்கியின் மனித வளத் திட்டமானது பிரிவுகளின் தலைவர்களிடமிருந்து பெறப்பட்ட வணிக செயற்பாட்டு பகுதிகளில் உள்ள தேவைப்பாடுகளின் அடிப்படையில் வருடாந்தம் திருத்தப்படுகிறது. அதன் பிரகாரம் மனிதவளத் திட்டத்துக்கு வருடாந்தம் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்படுகிறது. ஆகையால் DGMM பதவிநிலைகளை அகற்றுதல் மற்றும் சேர்த்தல் வங்கியின் செயற்பாட்டுத் தேவைப்பாடுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது.

மனித சக்தி திட்டத்திற்கான வருடாந்த மாற்றங்கள் தேவையற்ற பதவிகள் மற்றும் அசாதாரண ஆட்சேர்ப்புகளுக்கு வழிவகுக்கும். ஆகையால் வங்கி இது தொடர்பாக ஆக்கபூர்வமான கட்டுப்பாடுகளை பேண வேண்டும்.

(ஆ) 2017 முதல் இடர் முகாமைத்துவ தலைவர் பதவிநிலை பதவியணியில் இருந்து நீக்கப்பட்டு, தற்போது, AGM (இடர்) வங்கியின் இடர் முகாமைத்துவ செயற்பாட்டை நடாத்தி வருகிறார். தலைமை இடர் உத்தியோகத்தர் ஒருவரை சுதந்திரமான முக்கிய முகாமைத்துவ பதவிநிலையில் அமர்த்துவதன் மூலம் வங்கியின் இடர் முகாமைத்துவ செயற்பாட்டை வங்கி வலுப்படுத்தியிருக்கவில்லை. இடர் முகாமைத்துவ செயற்பாடானது கணக்காய்வு, நிதி, பின் அலுவலகம் (Back Office) மற்றும் ஏனைய கட்டுப்பாட்டு செயற்பாடுகள் போன்ற சுயாதீனமான அறிக்கையிடல் வரிசையொன்றை கொண்டிருக்க வேண்டும்.

2013 ஆம் ஆண்டில் பிரதம முகாமையாளர் (இடர் முகாமைத்துவம்) பதவிக்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர், உதவிப் பொது முகாமையாளர் (இடர் முகாமைத்துவம்) பதவிக்கு 2018.05.01 இலிருந்து அமுலுக்கு வரும் வகையில் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

குறித்த உத்தியோகத்தர் பிரதம இடர் உத்தியோகத்தராக (CRO) 2018.10.01 இலிருந்து அமுலுக்கு வரும் வகையில் நியமனம் செய்யப்பட்டிருந்தார். CRO என்பது வங்கியின் முக்கிய முகாமைத்துவ ஆளணி (KMP) ஆகும். அதன் பிரகாரம் இது 2019 இன் வங்கிச் சட்ட நிர்ணயம் 01 உடன் இணங்குகின்றது.

CRO நேரடியாக BIRMC இற்கு அறிக்கையிடுவதுடன் இது ஒரு சுயாதீனமான முக்கிய முகாமைத்துவ பதவிநிலையாகும்.

ஆக்கபூர்வமான சுதந்திரத்திற்காக பிரதம இடர் உத்தியோகத்தராக வங்கியின் உயர்மட்ட பதவிநிலைக்கு வங்கி நியமனம் செய்ய வேண்டும்.

(இ) நிரந்தர பதவியணியினரில் AGM பதவிநிலைகள் ஆண்டுக்கு ஆண்டு பின்வருமாறு மாற்றப்பட்டிருந்தன.

| பதவி | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 |
|---|---|---|---|---|---|
| AGM (செயற்பாடு/ பிராந்தியம்) | 3 | 2 | 3 | 1 | 5 |
| AGM (சில்லறை கடன்/ அறவீடு/ கடன்) | 2 | 2 | 2 | 3 | 2 |
| AGM (சட்டம்) | 1 | 0 | 1 | 1 | 1 |
| AGM (சந்தைப்படுத்தல்) | 1 | 0 | 0 | 1 | 0 |
| AGM (IT) | 3 | 2 | 2 | 3 | 2 |
| BOD இன் செயலாளர் | 1 | 0 | 0 | 1 | 1 |
| AGM (நிதி / திட்டமிடல்) | | | | | |
| AGM (ஆதரவு சேவை) | 1 | 1 | 1 | 1 | 0 |

வங்கியின் மனித வளத் திட்டமானது பிரிவுகளின் தலைவர்களிடமிருந்து பெறப்பட்ட வணிக செயற்பாட்டு பகுதிகளில் உள்ள தேவைப்பாடுகளின் அடிப்படையில் வருடாந்தம் திருத்தப்படுகிறது. அதன் பிரகாரம் மனிதவளத் திட்டத்துக்கு வருடாந்தம் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்படுகிறது. ஆகையால் DGMM பதவிநிலைகளை அகற்றுதல் மற்றும் சேர்த்தல் வங்கியின் செயற்பாட்டுத் தேவைப்பாடுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது.

மனித சக்தி திட்டத்திற்கான வருடாந்த மாற்றங்கள் தேவையற்ற பதவிகள் மற்றும் அசாதாரண ஆட்சேர்ப்புகளுக்கு வழிவகுக்கும். ஆகையால் வங்கி இது தொடர்பாக ஆக்கபூர்வமான கட்டுப்பாடுகளை பேண வேண்டும்.

(3) கிளைத் தேவைப்பாடுகளின் அடிப்படையில் வங்கி முறையான இடமாற்றக் கொள்கையை கொண்டிருக்கவில்லை. ஆகையால் பதவியணியினரை அவர்களது சொந்தப் பகுதிகளுக்கு இடம்மாற்றுவதன் காரணமாக கிளைகளில் வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன. ஆட்சேர்ப்பின் போது நாடு முழுவதும் பணியாற்றுவதற்கு வங்கி இணக்கப்பாட்டை பெற்றிருந்த போதிலும் ஊழியர்களின் தனிப்பட்ட தேவைப்பாடுகளைக் கருத்தில் கொண்டு இடமாற்றங்கள் வழங்கப்படுகின்றன.

வங்கி அங்கீகரிக்கப்பட்ட இடமாற்றக் கொள்கையைக் கொண்டுள்ளது. இடமாற்றக் கொள்கையின் பிரகாரம் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் ஒரே நிலையத்தில் 5 ஆண்டுகளை பூர்த்தி செய்திருந்த தரம் IV மற்றும் அதற்குக் கீழே உள்ள முறையே 318 மற்றும் 209 ஊழியர்களை வங்கி இடமாற்றம் செய்துள்ளது. 2020 ஆம் ஆண்டின் போது கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக 5 ஆண்டு இடமாற்றங்கள் பாதிக்கப்பட்டிருக்கவில்லை.

எனினும், தரம் III-II மற்றும் III-III பதவி உயர்வுகள் உட்பட 268 ஊழியர்களும், அதே நிலையத்தில் 5 ஆண்டுகளை பூர்த்தி செய்திருந்த தரம் IV மற்றும் VI இல் உள்ள

வங்கி இடமாற்றக் கொள்கையை நாளதுவரையாக்கப்பட வேண்டியதுடன் வங்கித் தேவைப்பாடுகளின் பிரகாரம் அதனுடன் கண்டிப்பாக இணங்க வேண்டும்.

374 ஊழியர்களும் 2021 இல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

வங்கியின் உண்மையான தேவைப்பாட்டை கருத்தில் கொண்டு இடமாற்றங்கள் செய்யப்படுகின்றன. மேலும், இடமாற்றம் செய்யும் போது, ஊழியர்களின் மேன்முறையீடுகள்/ குறைகள் அவர்கள் வெளியூர் கிளைகளில் நீண்டகாலம் பணியாற்றியிருந்த போதும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன, ஏனெனில் இது வங்கிக்கான அவர்களின் பங்களிப்பில் தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

(4) பின்வரும் முக்கிய முகாமைத்துவ பதவிநிலைகள் கருத்தில் கொள்ளப்படக்கூடிய காலம் முதல் தனிப்பட்ட முக்கிய முகாமையாளர்களால் மேவுகை செய்யப்படுகின்றன.

| **வெற்றிட பதவிநிலை** | **பதவிநிலையின் கடமைகள் பின்வருவோரால் மேவுகை செய்யப்படுகின்றன** | **பதிற்கடமை நியமன திகதி** |
|---|---|---|
| DGM (நிதி) | சிரேஷ்ட DGM | 1950/2020 ஆம் இலக்க GM சுற்றறிக்கை மூலம் 2020.09.22 |
| DGM (சர்வதேசம்) | DGM (கடன்) | 06/2020 ஆம் இலக்க தலைவரின் சுற்றறிக்கை மூலம் 2020.10.19 |
| DGM (அறவீடுகள்) | DGM (சந்தைப்படுத்தல்) | 04/2020 ஆம் இலக்க தலைவரின் சுற்றறிக்கை மூலம் 2020.10.12 |

DGM (அறவீடுகள்) மற்றும் DGM (சர்வதேசம்) பதவிநிலைகள் சபை அங்கீகரித்த பதவியணியினர் 2021 இல் காணப்படவில்லை.

அதன் பிரகாரம் விசேட தரத்தில் மாத்திரமே பதிற்கடமை பதவிநிலை Actg. DGM (நிதி, கூட்டுத்தாபன திட்டமிடல் & MIS) உள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உள்ள பதவிகளிற்கு நிரந்தர நியமனங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(அ) பதிற்கடமை பதவிகள் அல்லது மேவுகை செய்யப்படும் பதவிநிலைகளுக்கு அங்கீகாரம் வழங்குவதற்கு வங்கி நிலையான முறையைப் பயன்படுத்தியிருக்கவில்லை. உதராணமாக DGM (நிர்வாகம்), DGM (அறவீடு) மற்றும் DGM (சர்வதேசம்) தலைவர் சுற்றறிக்கை மூலம் நியமனம் செய்யப்பட்டிருந்த அதே நேரம் DGM (நிதி) பொது முகாமையாளரின் சுற்றறிக்கை மூலம் நியமனம் செய்யப்பட்டிருந்தார். மேலும், DGM (IT) பணிப்பாளர் சபையால் நியமனம் செய்யப்பட்டிருந்தார்.

அங்கீகரிக்கப்பட்ட HR கொள்கை கையேட்டின் பிரகாரம் வங்கியில் KMP பதவிநிலைக்கான ஏதேனும் மாற்றங்கள் பொது முகாமையாளரின் சுற்றறிக்கை மூலம் தெரிவிக்கப்பட வேண்டும். இது எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படும்.

HR பிரிவு HR கொள்கை கையேட்டைப் பின்பற்ற வேண்டும்.

| | | |
|---|---|---|
| (ஆ) 2006 இன் 6 ஆம் இலக்க நிதி கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு நிதி நிறுவனமும் சிரேஷ்ட முகாமைத்துவ மட்ட உத்தியோகத்தர் ஒருவரை இணக்கப்பாட்டு உத்தியோகத்தராக (compliance officer) நியமனம் செய்ய வேண்டும். அவர் சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் நிதி நிறுவனம் இணங்குவதை உறுதிப்படுத்துவதற்கு பொறுப்பாக இருப்பார். அத்துடன் இணக்கப்பாட்டு உத்தியோகத்தர் அனைத்து வாடிக்கையாளர் பதிவுகள் மற்றும் அவர்களின் செயற்பாடுகளை நிறைவேற்ற தேவையான ஏனைய தொடர்புடைய தகவல்கள் என்பவற்றிற்கான உடனடி அணுகுதலைக் கொண்டுள்ளமை உறுதிப்படுத்தப்படுகின்றது. எனினும், DGM மட்டம் அல்லது பிரதம இணக்கப்பாட்டு உத்தியோகத்தரை நியமனம் செய்யாமல், உதவி பொது முகாமையாளர் ஒருவரை நியமனம் செய்ததன் மூலம் வங்கியின் ஒட்டுமொத்த இணக்கச் செயற்பாட்டை வங்கி மேற்கொண்டிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட HR கொள்கை கையேட்டின் பிரகாரம் வங்கியில் KMP பதவிநிலைக்கான ஏதேனும் மாற்றங்கள் பொது முகாமையாளரின் சுற்றறிக்கை மூலம் தெரிவிக்கப்பட வேண்டும். இது எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படும்.<br><br>இணக்கப்பாட்டு உத்தியோகத்தர் 2013.11.18 இலிருந்து அமுலுக்கு வரும் வகையில் வங்கிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளார். அவர் உதவி பொது முகாமையாளர் பதவிநிலைக்கு (விசேட தரம்) 2018.11.01 இலிருந்து அமுலுக்கு வரும் வகையில் பதவி உயர்வு பெற்றுள்ளார்.<br><br>2019 இன் 01 ஆம் இலக்க வங்கிச் சட்ட நிர்ணயத்தின் பிரகாரம் நிறைவேற்று செயற்பாடுகளை செய்யும் உத்தியோகத்தர்களின் உடற்தகைமை மற்றும் தகுதியுடைமையை மதிப்பிடுதல், மேலதிக பொது முகாமையாளர், சிரேஷ்ட Dy. பொது முகாமையாளர், Dy. பொது முகாமையாளர், உதவி பொது முகாமையாளர், பிரதம இடர் உத்தியோகத்தர் மற்றும் இணக்கப்பாட்டு உத்தியோகத்தர் ஆகியோர் உரிமம் பெற்ற வங்கியில் நிறைவேற்று செயற்பாடுகளைச் செய்யும் உத்தியோகத்தர்களாக உறுதிப்படுத்தப்படுகின்றனர்.<br><br>மேலும், இணக்கப்பாட்டு உத்தியோகத்தர் முக்கிய முகாமைத்துவ | இணக்கப்பாட்டு உத்தியோகத்தர் ஏனைய பிரிவு தலைவர்களை விட கீழ் நிலையில் உள்ளதால் சரியான சுதந்திரத்தை பேண முடியாது. எனவே இணக்கப்பாட்டு உத்தியோகத்தர் உயர் பதவிநிலையில் வைக்கப்பட வேண்டும். |

பதவிநிலையொன்றாகக் கருதப்படுகிறதுடன் இவர் வங்கியின் சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவிற்கு (BIRMC) நேரடியாக அறிக்கையிடுகிறார். ஆகையால் இணக்கப்பாட்டு உத்தியோகத்தர் வங்கியில் ஒரு சுதந்திரமான முக்கிய முகாமைத்துவ பதவிநிலையை வகிக்கிறார்.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 முகாமைத்துவ தகவல் முறைமையின் செயற்திறன்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு IT பிரிவின் 12 வகையான வைப்புக்களை கருத்தில் கொள்ளாததால், நிதிக்கூற்றுக்களின் பிரகாரமும் IT பிரிவிலிருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரமும் நிலையான வைப்பு மீதிகளிற்கு இடையே ரூபா 422,831,641 தொகையான வேறுபாடு காணப்படுகின்றது. | நிதிக்கூற்றுக்களில் 2020.12.31 இல் உள்ளவாறு நிலையான வைப்புக்களாக காட்டப்பட்ட தொகை சரியானதாகும். | தீர்மானம் எடுக்கும் நோக்கத்திற்காக எந்த நேரத்திலும் தகவல் முறைமையிலிருந்து எடுக்கப்படும் தகவல்கள் சரியானதாக இருக்க வேண்டும். |